தொழில்நுட்பத்திலே முழுமையாக இந்த மையம் நமக்குப் பயன்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

பட்டா

***107936-திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப் பதிவின்போது சொத்து மாற்றம் செய்யப்படும் நிலையிலேயே பட்டா மாற்றமும் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சொத்து மாற்றம் செய்ய பதிவிற்கென பெறப்படும் ஆவணங்கள் பதிவிற்குப் பின்னர் பட்டா மாற்றம் செய்வதற்குரிய பதிவுற்ற ஆவணங்களின் விவரங்களை ஒரு வார காலத்திற்குள் உரிய வட்டாட்சியாளருக்கு அனுப்பப்படுவதுடன், அந்த வட்டாட்சியாளர் தங்களது வருவாய்ப் பதிவேட்டில் சரிபார்த்து உட்பிரிவு செய்து, உடனுக்குடன் பட்டா மாற்றம் செய்கின்றார்.

(ஆ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் R.P.T. முறையை இப்போது சொல்லியிருக்கிறார்கள். இந்த முறை தமிழகத்தில பரவலாக எங்கு கேட்டாலும் பின்பற்றப்படவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால்,

விவசாயிகள் *5* சென்ட், *10* சென்ட் நிலங்களைப் பதிவு செய்துவிட்டு, அதற்குப் பட்டா மாற்றம் செய்வதற்கு பல மாதங்கள் அலைய வேண்டியிருக்கிறது. இதை ஒரு வாரத்திற்குள் அல்லது *15* நாட்களுக்குள்ளாவது அவர்களுக்குப் பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே பதிவு செய்தவுடன் பட்டா கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா மாற்றம் செய்வது பதிவுத் துறையில் முடியாத ஒன்று. இருந்தாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தைக் கருத்திற்கொண்டும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரைப்படியும், பத்திரப் பதிவுத் துறையில் பட்டா மாற்றம் கணினி வழியில் உடனடியாக வழங்க அகல வலைப்பின்னல் (State-wide Area Network) மூலம் முதற்கட்டமாக *168* சார் பதிவகங்கள் வட்டாட்சியாளர் அலுவலகங்களுடன் இணைப்பு ஏற்படுத்தப்படவிருக்கிறது. மீதமுள்ள *406* சார் பதிவாளர் அலுவலகங்களைப் படிப்படியாக இணைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துவிட்டால், உடனுக்குடன் கிடைக்கக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். இருந்தாலுங்கூட, உடனுக்குடன் வட்டாட்சியாளர் அலுவலகங்கள் கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கணினி முறையை நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த முறையை விரிவுபடுத்துவதை வரவேற்கிறோம். அதேசமயத்தில் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் இருக்கிற சர்வேயர்கள், அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதே இன்றைக்கு விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. பத்திரப் பதிவுத் துறை அமைச்சர்

2010 நவம்பர் 11]

அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் அருகருகே அமர்ந்திருக்கிறார்கள். எனவே, இவர்கள் இணைந்து, மக்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்குவதற்கான திட்டத்தை விரைவுபடுத்துவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையின் சார்பாகப் பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற புகார்கள் இதுவரையிலும் இல்லை. வருவாய்த் துறையிலும் காலதாமதம் என்று இதுவரையிலும் புகார்கள் இல்லை. அப்படிக் குறிப்பிட்டு ஏதாவது இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரியப்படுத்தினால், உடனடியாகப் பட்டா வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லா இடங்களிலும் பத்திரம் பதிந்து பல மாதங்கள் ஆனாலும், வருவாய்த் துறைக் கணக்கிலே சரியாகப் பதிவு செய்வதில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், பல நடைமுறைகளிலே பல பிரச்சினைகளைச் சொல்கிறார்கள். அந்த நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு பத்திரம் பதிந்தவுடன் எத்தனை நாட்களுக்குள் வருவாய்த் துறையினுடைய கணக்கிலே பதிய வேண்டும் என்பதை நமது அரசாங்கம் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் பதியப்பட்டவுடன் ஒரு வார காலத்திற்குள்ளாக வருவாய்த் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதை மாவட்டப் பதிவாளர்கள் மாதத்தில் 1 ஆம் தேதியிலிருந்து 7 ஆம் தேதிக்குள்ளாகக் கண்காணித்து,

அந்தத் தகவல் மாநில பதிவுத் துறைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுவது என்பது இதுவரையிலும் இருந்து வருகிற நடைமுறை. இருந்தாலுங்கூட, வருவாய்த் துறையில் காலதாமதமாகிறது என்ற ஒரு குறையை நிச்சயமாக இந்தத் துறை கவனித்ததன் அடிப்படையில்தான், State-wide Area Network என்ற அந்த முறையைப் புகுத்தக்கூடிய அளவிற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் நூறு சதவிகிதம் முடிவடைகின்றபோது நிச்சயமாக இந்தக் குறை முழுவதுமாகக் களையப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

விடுதி

***92089-திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி தொடங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலினையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.